தலைமைத் தேர்தல் ஆணையர்

ஞானேஷ்குமாருக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை!

கேரள அரசு உத்தரவு!

திருவனந்தபுரம், அக்.6 -

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணைக்கு கேரள உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

தலைமை தேர்தல் ஆணையரான ஞானேஷ் குமார், 2006 ஆம் ஆண்டு கேரள பொதுப்பணித்துறை செயலாளராக இருந்தார். அப்போது அவர் மீது தொடுக்கப்பட்ட புகார் தொடர்பான விசாரணைக்கு தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது.

கே.பி.சி.சி செயற்குழு உறுப்பினர் வேணுகோபால் அளித்த புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கேரள உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னித்தலா அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

வழக்கின் பின்னணி

2006ஆம் ஆண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன், ரூ. 215 கோடி மதிப்பில் திருவனந்த புரம் அங்கமாலி மாநில நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டம் கேரள மாநில போக்குவரத்து திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது. அப்போது பொதுப்பணித்துறை செயலாளராக இருந்தவர் ஞானேஷ் குமார். இந்த திட்டம் மலேசிய நிறுவனமான PATIBEL கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் திட்டப் பொறியாளரான லீ சீ பீன், கோலாலம்பூரில் தற்கொலை செய்து கொண்டார். அவர் எழுதியதாக கூறப்படும் கடிதத்தில், ஞானேஷ்குமார் பில்களை நிறுத்தி வைத்ததாகவும், தன்னை துன்புறுத்தியதாகவும் குற்றம் சாட்டியிருந்தார். இதனைத் தொடர்ந்தும் அப்போதைய வி.எஸ். அச்சுதானந்தன் தலைமையிலான அரசு ஒரு ஆரம்ப விசாரணையைத் தொடங்கி ஞானேஷ் குமாரை பணியிட மாற்றம் செய்தது.

இதையடுத்து, அவர் மத்திய அரசுப் பணிக்கு சென்றதால், விசாரணை கிடப்பில் போடப்பட்டது. இந்நிலையில், முன்னாள் நிதியமைச்சர் டி.எம். தாமஸ் ஐசக், இந்த கடிதத்தை மீண்டும் பொது வெளியில் கொண்டு வந்ததைத் தொடர்ந்து, இந்த விவகாரம் தொடர்பான விசாரணை மீண்டும் தொடங்கப்பட்டது.

லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை!

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னித்தலா, "2006 இல் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டபோது ஞானேஷ் குமார் பொதுப்பணித் துறை செயலாளராக இருந்தார். மலேசிய திட்டப் பொறியாளர் லீ சீ பீன், கோலாலம்பூரில் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு அவரது மனைவிக்கும், நிறுவன இயக்கு நருக்கும் எழுதிய தற்கொலைக் கடிதங்களில் ஞானேஷ் குமாரின் பெயரை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார்.

அப்போது விசாரணை தொடங்கப்பட்டாலும், அவர் மாற்றப்பட்ட பிறகு கிடப்பில் போடப்பட்டது. சமீபத்திய புகாரின் அடிப்படையில் விரிவான லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை அவசியம் என்று கண்டறியப்பட்டது. இது குறித்து கேரள முதலமைச்சர் வி.டி. சதீசன் விவாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் மனோஜ் ஆபிரகாமை முழுமையான விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

விளையாடச் சென்றபோது சோகம்:

குரோம்பேட்டையில் 4 குழந்தைகள் ஏரியில் சடலமாக மீட்பு!

குரோம்பேட்டை, அக். 6 -

வீட்டின் அருகே விளையாடச் சென்ற 4 பள்ளி மாணவர்கள் திருநீர்மலை ஏரியில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குரோம்பேட்டை லட்சுமிபுரம் கிருஷ்ணா தெருவைச் சேர்ந்த தயாளன் மகன் யுவனேஷ் (10), கிருபாகரன் மகன் தேவதர்ஷன் (12), ரங்கநாதசாமி 2வது தெருவைச் சேர்ந்த பூஜா (13), ரங்கநாதசாமி 1வது தெருவைச் சேர்ந்த லால்சந்த் மகள் குஷி (13) ஆகிய 4 பேரும் நேற்று முன்தினம் மாலை வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ளனர். பின்னர் அவர்கள் வீடு திரும்பவில்லை.

இதையடுத்து பெற்றோர் குரோம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். போலீஸார் வழக்குப்பதிவு செய்து மாணவர்களைத் தேடி வந்தனர். மேலும் காணாமல்போன குழந்தைகள் குறித்த தகவல்கள் அப்பகுதி வாட்ஸ்அப் குழுக்களிலும் பகிரப்பட்டு, அவர்களை கண்டுபிடிக்க பொதுமக்கள் உதவி கோரப்பட்டது. இந்நிலையில் நேற்று காலை லட்சுமிபுரம் பகுதியில் உள்ள திருநீர்மலை ஏரியில் 4 சிறார்கள் உயிரிழந்த நிலையில் கிடப்பதாக பொதுமக்கள் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற போலீஸார் மற்றும் தீயணைப்பு, மீட்புப் படையினர் 4 பேரின் உடல்களையும் மீட்டனர்.

விசாரணையில், பள்ளி விடுமுறை என்பதால் 4 பேரும் அருகிலுள்ள ஏரிக்கு குளிக்கச் சென்றிருக்கலாம் என்றும், அப்போது ஏரியில் இருந்த சேற்றில் சிக்கி நீரில் மூழ்கியிருக்கலாம் என்றும் முதற்கட்டமாகத் தெரியவந்துள்ளது.

மீட்கப்பட்ட உடல்கள் பிரேதப் பரிசோதனைக்காக தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. குழந்தைகளின் உடல்களைப் பார்த்த பெற்றோர், உறவினர்கள் கதறி அழுதது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. சம்பவம் குறித்து குரோம்பேட்டை போலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏரிகளில் பாதுகாப்பு

ஏரியில் மூழ்கி 4 குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, தாம்பரம் மாநகராட்சி மற்றும் நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

3644 காவலர், 1299 எஸ்.ஐ. பணி நியமனத்தில் சிக்கல் நீடிப்பு!

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காத்திருக்கும் நிலை!

நீதிமன்ற வழக்குகளை விரைந்து முடிக்க வலியுறுத்தல்!

சென்னை, அக். 6 -

நீதிமன்ற வழக்குகளால் 3,644 காவலர்கள் பணியிடங்கள் காலியாக இருப்பதும் 1,299 எஸ்.ஐ. தேர்வர்கள் பணிவாய்ப்புக்காக காத்திருப்பதும் தொடர்ந்து நீடிக்கிறது. இதனால் இருக்கிற காவலர்களுக்கு பணிச்சுமை அதிகரிப்பதுடன் எஸ்.ஐ. தேர்வு எழுதி காத்திருப்பவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி உள்ளது.

குற்றங்களை கட்டுப்படுத்தவும் சட்டம்ஒழுங்கை பாதுகாக்கவும் காவல்துறையை உயர் அதிகாரிகள் முடுக்கிவிட்டுள்ளனர். காவல் துறையின் செயல்பாட்டை மேலும் வலுப்படுத்துவதற்கு காலிப்பணியிடங்கள் இடையூறாக உள்ளன. இந்தாண்டு (2026) நிலவரப்படி தமிழக காவல்துறையில்

'1 லட்சத்து 34,667 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. ஆனால், சுமார் 1 லட்சத்து 18,851 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். இதனால் சுமார் 15 ஆயிரம் பணியிடங்கள் காலியாக உள்ளன. சட்டம் ஒழுங்கு, ரோந்து, குற்றத்தடுப்பு, விசாரணை உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள உரிய எண்ணிக்கையில் காவலர்கள் இல்லை. இதனால் பணியில் இருக்கும் காவலர்களுக்கு பணிச்சுமை அதிகரித்துள்ளது.

இதுதவிர பணி ஓய்வு காரணத்தினாலும் காலியிடங்களின் எண்ணிக்கை மாதம்தோறும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

எனவே, புதிய ஆட்களை தேர்வு செய்து பணியில் அமர்த்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால், காவலர் தேர்வு என்பது உடனடியாக முடியும் பணியல்ல. அறிவிப்பு வெளியிடுதல், எழுத்துத்தேர்வு, உடற்தகுதி தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, பயிற்சி என பல்வேறு கட்டங்களை கடக்க ஒன்றரை ஆண்டுகளாகும்.

இதற்கிடையே ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் நீதிமன்ற வழக்குகளால் தாமதமாகி வருகின்றன. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் கடந்த ஆண்டு ஆக.21ம் தேதி 2,833 2ம் நிலை காவலர்கள், 180 இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள், 631 தீயணைப்பாளர்கள் என மொத்தம் 3,644 பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிட்டது.

இதற்கான எழுத்துத் தேர்வு நவ.9ம் தேதியும், உடற்தகுதி தேர்வு இந்தாண்டு ஜன.22 முதல் பிப்.2ம் தேதி வரையும் நடைபெற்றது. இறுதி கட்ட ஆப் மதிப்பெண்கள் வெளியிடப்பட இருந்த நிலையில், நிர்ணயிக்கப்பட்ட உயரத்தில் இருந்து 1 செ.மீ. குறைவாக அனுமதிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதனால் இந்தத் தேர்வு நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

இதேபோல், 1,299 எஸ்.ஐ. பணியிடங்களுக்கான அறிவிப்பு கடந்தாண்டு ஏப்.4ம் தேதி வெளியிடப்பட்டு, எழுத்துத் தேர்வு டிச.21ம் தேதி நடைபெற்றது. தமிழ்வழி கல்வி இடஒதுக்கீடு தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் இந்த தேர்வும் அடுத்த கட்டத்துக்கு நகராமல் உள்ளது.

ஒருபுறம் காவல்துறையில் சுமார் 15 ஆயிரம் காலிப்பணியிடங்கள், மறுபுறம் தேர்வு நடைமுறைகள் முடிந்தும் பணியில் சேர முடியாமல் ஆயிரக்கணக்கான தேர்வர்கள் காத்திருக்கும் நிலை என்ற அவல நிலை நீடிக்கிறது.

எனவே, நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்து, தகுதியான தேர்வர்களை உடனடியாக பணியில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. எனவே, பணி ஓய்வுபெறும் காவலர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு முன்கூட்டியே ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதே காலிப்பணியிடங்களின் அதிகரிப்பை தடுக்க முடியும்.

தகரம்....

திடகாத்திரமான ஒருவரால் எப்படி இதுபோல அந்தர் பல்டிகளை அடிக்க முடிகிறது என்னும் ஆதங்கத்தைதான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வெளிப்படுத்தினார்.

உடனே அதனை உருவக்கேலி என்கின்றனர்.

பொது இடத்தில் தொடங்கி புனித மிக்க சட்டப் பேரவை வரை தலையை வெட்டுவது போன்ற அருவருக்கத்தக்க உடல்மொழி கேலிகளை செய்கிற மலிவான மனிதர் விஜய் தான்...

ஆக

தங்கத்தை தரம் பார்த்து சொல்லும் தகுதி உறைகல்லுக்கு உண்டே தவிர



துருப்பிடித்த தகரத்துக்கு கிடையாது என்பதே உண்மை ..



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(03.10.2026)



1. ஓசூரில் 15 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த கல்வித்துறை பயிற்சியாளர் போக்சோ சட்டத்தில் கைது.

பள்ளியில் தேர்வு எழுத விடமாட்டேன் என கல்வித்துறை பயிற்சியாளர் மிரட்டல் - பெற்றோர் அதிர்ச்சி.

2. கரூர் மாவட்டம் தரகம்பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் நாகராஜ், சுரேஷ் இருவரை அதிகாலையில், வீடுபுகுந்து போலீஸார் கைது செய்ததால் பரபரப்பு.



பொய் வழக்கில் விவசாயிகளை கைது செய்திருப்பதாக கண்டனம் தெரிவித்து விவசாய சங்கத்தினர் சாலை மறியல் போராட்டம்.

3. த.வெ.க. சென்னை மாவட்டச் செயலாளர் வேல்முருகன் மீது த.வெ.க. இளைஞரணி அமைப்பாளர் சுரேந்தர் பரபரப்பு புகார்.

கட்சியில் பொறுப்பு தருகிறேன் என கூறி பெரும் தொகையை பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டதாக த.வெ.க. மாவட்டச்செயலாளர் மீது புகார்.

மனைவிக்கு அரசு வேலை வாங்கிக்தருவதாக கூறி பணம் பெற்றுக் கொண்டு த.வெ.க. மாவட்டச்செயலாளர் மோசடி செய்து விட்டதாகவும்



குற்றச்சாட்டு.

த.வெ.க. சென்னை மாவட்டச் செயலாளர் வேல்முருகன் பயன்படுத்தும் காருக்கு EMI கட்டினேன்; ஆனால் என்னை ஏமாற்றி விட்டனர்.

த.வெ.க. மாவட்டச் செயலாளர் அப்பு வேல்முருகன் எனக்கு கொலை மிரட்டல் விடுக்கிறார் என புகார்.

4. காட்டுமன்னார்கோவில் அருகே வெளிநாட்டில் வேலைக்கு அனுப்பிய விவகாரத்தில் கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்டு வந்தவர்களுக்கும், ஏஜெண்டுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில், ஏஜெண்டை வீடு புகுந்து குண்டுகட்டாக தூக்கி காரில் கடத்திச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக தவெக ஒன்றிய செயலாளர் உள்பட 7 பேரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பரத் சூர்யாவை கடத்தியதாக காரைக்குடியை சேர்ந்த அபிராஜ் (24), அவரது தந்தை சுப்பிரமணியம் (50), கார் ஓட்டுநர் பிரபு (30), கணேசன் (40), வினித் (22), நாகராஜன் (25), காளீஸ்வரன் (26) ஆகிய 7 பேரை போலீசார் கைது செய்தனர்.



இதில் காளீஸ்வரன், சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை த.வெ.க. ஒன்றிய செயலாளராக இருப்பதாகவும், கார் ஓட்டுநர் பிரபு மற்றும் வினித் ஆகியோரும் தவெக நிர்வாகிகள் எனவும் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஸ்கார்பியோ காரையும் போலீசார் பறிமுதல் செய்து, கைது செய்யப்பட்ட 7 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வெளிநாட்டு வேலைக்காக பெறப்பட்ட பணத்தை திருப்பிக் கேட்கப்பட்ட விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்சினை, ஆள் கடத்தல் வரை சென்ற சம்பவம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

வேப்பூர் கிளை இளைஞரணி அமைப்பாளர் முத்துதுரை தந்தை!

டீக்கடை மூர்த்தி மறைவு!

கழகத்தினர் - உறவினர்கள் அஞ்சலி!

கடலூர், அக். 6 –

கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் வேப்பூர் தி.மு.க கிளை இளைஞரணி அமைப்பாளர் மூ.முத்துதுரை தந்தையும் கழக மூத்த முன்னோடியும் டீக்கடை மூர்த்தி வயது (72) உடல் நலக் குறைவினால் 03.10.2026 சனிக்கிழமை மாலை 4.45 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வேப்பூர் கூட்டுசாலை வ. குணசேகரன் ஒன்றிய பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வெ.செல்வராசன் கிளைக் கழக செயலாளர் அ.விஜயன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மறைவெய்திய அன்னாருக்கு



அன்னபூர்ணம் மற்றும் செல்வி என்ற இரண்டு மனைவிகள் அமுதா,மாலதி என்ற இரண்டு மகள்கள் முத்துதுரை என்ற ஒரு மகனும் உள்ளனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 04.10.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு வேப்பூரில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

சென்னை வடகிழக்கு மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.இளங்கோ துணைவியார்

இ.அம்சவேணி சாலை விபத்தில் பலி!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக். 6 -

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக பிரதிநிதி. டி.எஸ்.இளங்கோ எண். 9 ஸ்ரீராமன் சாலை தணிகாசலம் நகர் பொன்னியம்மன்மேடு சென்னை 110 எனும் முகவரியில் வசித்து வருகிறார்.

நேற்று முன்தினம் (4.10.2026) மதுராந்தகத்தில் தலைவர் பங்கேற்ற கூட்டத்தில் பங்கேற்று விட்டு அங்கே உள்ள தனது மகள் வீட்டில் மனைவியுடன் தங்கி விட்டு நேற்று காலை 7.00 மணிக்கு அவரும் அவரது



மனைவியுமான (திருமதி. இ.அம்சவேணி (வயது 58) இரு வரும் இருசக்கர வாகனத்தில் மதுராந்தகத்தில் இருந்து சென்னை திரும்பும் போது செங்கல் பட்டு அருகே பின்னால் வந்த லாரி மோதியதில் அவரது மனைவி உடல் நசுங்கி பலியானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மாவட்டப் பிரதிநிதி இளங்கோ லேசான காயங்களுடன் உயிர்தப்பினார்.

தகவல் அறிந்து மறைந்த அன்னாரது உடலுக்கு கழகத்தினர் ஏராளமானோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இவர்களுக்கு பொன்னரசி வயது 34, மலர்விழி வயது 32 என்கிற இரண்டு மகள்கள் உள்ளனர்.